## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.34.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பாண்டியராஜா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025.

A2 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது எட்டையபுரம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் இருந்து வருகிறேன். 01.04.2024 அன்று நான் அதே காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் இருந்தபோது ஆய்வாளர் எனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு எட்டையபுரம் – கோவில்பட்டி சாலையில் குமாரகிரி புதூர் சிகேடி பள்ளியைத் தாண்டி மேற்கே 500 மீட்டர் தள்ளி விபத்தில் ஒருவர் இறந்துவிட்டதாகவும், உடனே சம்பவ இடத்திற்கு வரவேண்டுமென்றும் சொன்னார். நான் உடனே அங்கு சென்றேன். அப்போது ஒரு நபர் விபத்தில் இறந்த நிலையில் இருந்தார். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் பிரேதத்தை இலவச ஆம்புலன்ஸ் மூலமாக எட்டையபுரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன். மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தேன். மருத்துவர் பார்த்துவிட்டு பிணவறையில் வைக்கும்படி சொன்னார்.

ஆய்வாளர் அ.சா.1, அ.சா.2, அ.சா.5, அ.சா.4, அ.சா.13 ஆகியோரை விசாரித்தார். அந்த விசாரணையை என் கைபேசியான ரெட்மி கைபேசி மூலம் ஒளிப்பதிவு செய்தேன். அந்த ஒளிப்பதிவை ஒரு பென்ட்ரைவில்

கணினி மூலம் பதிவு செய்து அதை ஆய்வாளரிடம் கொடுத்தேன். 65 பி படி மேற்படி பென்ட்ரைவில் பதிவு செய்ததற்காக ஆய்வாளருக்கு நான் ஒரு சான்றிதழ் கொடுத்தேன். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ 32**. இந்த ஆவணம் இந்த சாட்சியால் தயாரிக்கப்படவில்லை என்று எதிரிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகளுக்கு வழங்க வேண்டிய ஆவணப்பட்டியலில் அ.சா.ஆ 32 பற்றியும், சாட்சியின் கூடுதல் வாக்குமூலம் பற்றியும் குறிப்பிடப்படவில்லை என்றும், சாட்சிப் பட்டியலில் சாட்சியத் தன்மையிலும் அதைப் பற்றி குறிப்பிடவில்லை என்றும், சாட்சிகளின் வாக்குமூலத்தை கைபேசியில் ஒளிப்பதிவு செய்ததாக சொல்லப்படும் சங்கதி குறித்தும் சாட்சி பட்டியலில் தெரிவிக்கவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு **2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ 32 ல் யாருடைய கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி செல்போனில் உள்ள ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்டு. ஆண்ட்ராய்டில் மேம்படுத்தப்பட்ட என்ன வகையான சிஸ்டம் என்றால் எனக்குத் தெரியாது. கைபேசியில் எம்பி4 பார்மேட்டில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. நான் பிஎஸ்சி படித்துள்ளேன். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது இரவு சுமார் 8.30 மணியிருக்கும். அங்கு நான்தான் முதலில் சென்றேனா என்றால் அங்கு ஆய்வாளர், போலீசார் இரண்டு, மூன்று பேர் இருந்தார்கள். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன தேதியிலும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், பிரேதம் என்னிடம் ஒப்படைக்கப்படவும் இல்லை என்றும், நான் காவல்துறையில் இருப்பதால் ஆய்வாளர் என்னை சாட்சியாக இருக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில் எந்த சங்கதியும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. ஒளிப்பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று ஆய்வாளர் எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கவில்லை. அந்த பணிக்கு கடவுச் சீட்டும் கொடுக்கவில்லை. அதனால்தான் அ.சா.ஆ 32 ல் யாதொரு கையொப்பமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 32 இந்த வழக்கில் புலன் விசாரணையில் உட்படாத ஆவணம் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 32 ல் ஏன் நான் கையொப்பமிடவில்லை என்றால் ஞாபகமில்லை. முதல் விசாரணை சாட்சியம் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. என் சாட்சியம் எதிரிகளுக்கு எதிராக உபயோகப்படுத்த முடியாத சாட்சியம் என்றால் சரியல்ல.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.10.08 18:27:19 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.